**ஆகஸ்ட் – 03**

# TNPSC துளிகள்

- ❖ கோவா கப்பல் கட்டும் நிறுவனமானது, இந்தியக் கடலோர காவல்படைக்காக என்று உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட எட்டு விரைவு ரோந்துக் கப்பல்களில் ஆறாவது கப்பலான "ICGS அடல்" கப்பலினை அறிமுகப்படுத்தியது.
- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட பிரலய் என்ற ஏவுகணையின் தொடர்ச்சியான இரண்டு விமானச் சோதனைகளை ஒடிசாவின் டாக்டர் APJ அப்துல் கலாம் தீவில் வெற்றிகரமாக நடத்தியது.
- ❖ ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்திய இராணுவத்தின் 'சிவசக்தி நடவடிக்கை' மூலம் இரண்டு லஷ்கர்-இ-தைபா தீவிரவாதிகள் கொல்லப் பட்டனர்.
- ❖ பாரத ரத்னா டாக்டர் M. S. சுவாமிநாதன் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியானது ஆண்டுதோறும் "நிலையான வேளாண்மை தினமாக" கொண்டாடப்படும் என்று மகாராஷ்டிரா அரசு அறிவித்து உள்ளது.
- ❖ உத்தரப் பிரதேச மாநில அரசானது மறைந்து வரும், மாசுபட்ட மற்றும் பருவகால நதிகளைப் புத்துயிர் பெறச் செய்யும் நோக்கில் ஒரு விரிவான நதி புத்துயிர்ப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கான காரணி - அனைவருக்கும் கல்வி

- ❖ கடந்த நூற்றாண்டில் தமிழ்நாட்டின் மகத்தான பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பல காரணங்கள் உள்ளன.
- ❖ சமூக நீதி நமது சித்தாந்தம் என்றால், அதை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு கல்வியே அதன் மிகவும் பயனுள்ள கருவியாகும்.
- ❖ அனைவருக்கும் கல்வி என்பது, அதை பெறக் கூடியவர்கள் அல்லது அதற்கான "தகுதி" உள்ளவர்கள் ஆகியோருக்கு மட்டுமல்ல, அது சமத்துவப்படுத்தும் தன்மை மற்றும் செயல்படுத்தும் தன்மை ஆகிய வகைகளிலும் செயல்படுகிறது.
- ❖ சமத்துவமான தமிழ்ச் சமூகத்தை நாம் தொடர்ந்து கட்டியெழுப்புவதற்கான அடித் தளம் இதுதான்.
- ❖ 1920 ஆம் ஆண்டில், அப்போதைய சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள ஒரு பள்ளி, இந்தியாவில் முதன்முதலில் மாணவர்களுக்கு மதிய உணவை வழங்கியது.
- ❖ இந்த முயற்சி அப்போதைய சென்னை மாநகராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப் பட்டு நீதிக்கட்சித் தலைவர் P. தியாகராய செட்டியால் ஈர்க்கப் பட்டது.
- ❖ இந்த யோசனை உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பயனுள்ள பள்ளி உணவுத் திட்டங்களில் ஒன்றாக உருவாகியுள்ளது.
- ❖ இந்த அரசாங்கத்தால் 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட காலை உணவுத் திட்டத்துடன் இது விரிவடைந்துள்ளது.
- ❖ கற்றல் சார்ந்த விளைவுகளை மேம்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், சமூகத்தில்

சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழ்நாடு தனது கல்விக் கொள்கையை எவ்வாறு பயன்படுத்தியுள்ளது என்பதை விளக்கும் பல சீர்திருத்தங்களில் இதுவும் ஒன்றாகும்.

- உயர்கல்வியில் தமிழ்நாட்டின் மொத்தச் சேர்க்கை விகிதம் (GER) 47% ஆக உள்ள அதே நேரத்தில் தேசிய சராசரி 28.4% ஆகும்.
- பெண்களில் 47.3% ஆக உள்ள தமிழ்நாட்டின் GER என்பது தேசிய அளவான 28.5%-ஐ விட அதிகமாக உள்ளது.
- 1921 ஆம் ஆண்டில், நீதிக்கட்சியானது வகுப்புவாத அரசாணை என்று அறியப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாங்க ஆணையை (GO) நிறைவேற்றியது.
- இது அனைத்துச் சமூகங்களிலிருந்தும், குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களின் குழந்தைகளுக்கும் கல்வி கிடைப்பதை உறுதி செய்தது.




# தேசியச் செய்திகள்

## 65,000 கோடி டிஜிட்டல் பண வழங்கீடுகள்

- 2019 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான நிதியாண்டுகளில் இந்தியாவில் மொத்தம் 12,000 டிரில்லியன் டாலர் மதிப்பிலான 65,000 கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு முதல் பண வழங்கீட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் (PIDF) மூலம் சுமார் 4.77 கோடி டிஜிட்டல்வழி பணம் பெறல் மையங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.
- இந்த PIDF ஆனது சிறிய நகரங்கள், தொலைதூரப் பகுதிகள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் டிஜிட்டல் பண வழங்கீட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக

இந்திய ரிசர்வ் வங்கியால் நிறுவப் பட்டது.




## பிரேமச்சந்திரன் – அங்கீகரிக்கப்பட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர்




- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, பிரேமச்சந்திரனை அங்கீகரிக்கப்பட்ட ஒரு உயர்மட்டக் குழு உறுப்பினராக என சபை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்க பரிந்துரைத்துள்ளார்.
- மக்களவையில் நடைமுறை மற்றும் அலுவல் நடத்தை விதிகளின் 9வது பிரிவின் கீழ் அவர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
- இந்த விதியின் படி, சபாநாயகர் என்பவர் உறுப்பினர்களில் இருந்து 10 பேருக்கு மிகாத தலைவர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டும்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் இல்லாத நேரத்தில் சபாநாயகர் கோரும்

போது அல்லது சபாநாயகர் இல்லாத நேரத்தில் துணை சபாநாயகர் கோரும் போது, அவர்களில் எவரும் சபைக்குத் தலைமை தாங்கலாம்.

# சர்வதேசச் செய்திகள்

## பாலஸ்தீனத்திற்கான நியூயார்க் பிரகடனம்

- நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு, இரு நாடு தீர்வு மூலம் பாலஸ்தீன-இஸ்ரேலிய மோதலை முடிவுக்குக் கொண்டு வர அழைப்பு விடுத்து நியூயார்க் பிரகடனத்தை அறிமுகப்படுத்தியது.
- காசா போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வலியுறுத்தியதோடு, இஸ்ரேலிய நாட்டுப் படைகளை முழுமையாக திரும்பப் பெறவும், ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ் பாலஸ்தீன அதிகாரசபைக்கு நிர்வாகத்தை மாற்றவும் அழைப்பு விடுத்தது.
- ஆக்கிரமிப்பு முற்றுகை அல்லது இடப்பெயர்ச்சி இல்லாமல் காசாவை மேற்குக் கரையுடன் இணைக்க வேண்டும் என்றும், 1967 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பான எல்லைகளுக்குள் அந்த இரு நாடுகளும் அமைதியாக வாழ வேண்டும் என்றும் இந்தப் பிரகடனம் கோரியது.
- பல சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், தேர்தல்களை நடத்தவும், ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களின் மீதும் முழு கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் பாலஸ்தீன அதிகாரசபைக்கு நிதி மற்றும் அரசியல் ஆதரவை அது கோரியது.
- இரு-அரசு தீர்வுக்கு இஸ்ரேல் ஒரு பொது உறுதிப்பாட்டை பெறுமாறு கோரப் பட்டது.
- போர் நிறுத்த அமலாக்கத்திற்குப் பிறகு காசாவை உறுதிப்படுத்தவும் பொது மக்களைப் பாதுகாக்கவும் தற்காலிக ஐக்கிய நாடுகள் சபை தலைமையிலான ஒரு சர்வதேசப் படையை அனுப்புவதை இந்தப் பிரகடனம் அங்கீகரித்தது.




## பாலஸ்தீன அரசிற்கு ஐக்கியப் பேரரசு அங்கீகாரம்

- காசாவில் இஸ்ரேல் உறுதியான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், செப்டம்பர் மாத

ஐநா சபை கூட்டத்தில் ஐக்கியப் பேரரசு பாலஸ்தீன அரசிற்கு அங்கீகாரம் அளிக்கும்.

- இதன் நிபந்தனைகளில் போர் நிறுத்தம், மனிதாபிமான உதவிக்கான அணுகல், மேற்குக் கரையில் பிராந்திய ஆக்கிரமிப்பை நிறுத்துதல் மற்றும் நீண்டகால அமைதி செயல்முறைக்கு உறுதியளித்தல் ஆகியவை அடங்கும்.
- இந்த நடவடிக்கையானது இரு-அரசு தீர்வை ஆதரிப்பதோடு, நீடித்த பிராந்திய ஸ்திரத் தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரான்சு, ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகளிலிருந்து இதே போன்ற அங்கீகாரத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.
- இஸ்ரேல் இந்த நடவடிக்கையை எதிர்த்ததோடு, அது நடந்துகொண்டிருக்கும் அமைதி முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகக் கூறியது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவிற்குத் தயார் நிலையிலான மேகக் கணினி




- தகவமைப்பு மிக்க கணினி முறைமைக்காக வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதல்

செயற்கை நுண்ணறிவிற்கு தயார் நிலையிலான மேகக் கணினி அடிப்படையிலான JioPC எனப்படும் ஒரு மெய்நிகர் கணினித் தளத்தினை ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் வெளியிட்டது.

- இது சந்தா அடிப்படையிலான மாதிரியுடன் தேவைக்கேற்ற மேம்படுத்தல்களை வழங்குகிறது மற்றும் கற்றல் வேலை மற்றும் அன்றாடப் பணிகளுக்கான செயற்கை நுண்ணறிவு கருவிகளை வழங்குகிறது.
- JioPC ஆனது மாணவர்கள், தொழில் துறை வல்லுநர்கள் மற்றும் வணிகங்களுக்கு ஏற்ற முக்கிய செயற்கை நுண்ணறிவு கருவிகளுடன் Adobe Express முறைமைக்கான இலவச அணுகலை வழங்க Adobe நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது.

### CRIB இரத்தக் குழு

- பெங்களூரு அருகே உள்ள கோலாரைச் சேர்ந்த 38 வயது பெண் ஒருவர் மிகவும் அரிதான CRIB இரத்தக் குழுவைக் கொண்ட முதல் அறியப்பட்ட நபர் ஆவார்.
- CRIB என்பது Chromosome Region Identified as Blood group (இரத்தக் குழுவாக அடையாளம் காணப்பட்ட குரோமோசோம் பிராந்தியம்) என்பதைக் குறிக்கிறது மற்றும் இது இந்திய அரிய ஆன்டிஜென் (INRA) அமைப்பின் ஒரு பகுதியாகும்.
- இந்தப் புதிய இரத்தக் குழுவில் பொதுவான ஆன்டிஜென் இல்லாததால், இரத்த மாற்றம் மிகவும் சிக்கலானதாகவும், CRIB-எதிர்மறை இரத்தத்துடன் மட்டுமே மிகவும் இணக்கம் ஆனதாகவும் ஆக்குகிறது.
- கர்ப்பக் காலத்தில் கரு மற்றும் பச்சிளம் குழந்தையின் இரத்தச் சிவப்பணு சிதைவு நோயைத் தடுப்பதில் CRIB முக்கியப் பங்கு வகிக்கிறது.
- உலகளவில் 10க்கும் குறைவான CRIB இரத்தம் கொண்டவர்கள் பதிவானதாக அறியப் படுகின்றன என்ற ஒரு நிலையில் இது இன்று வரையில் அரிதான இரத்தக் குழுவாகக் கருதப்படுகிறது.





## சுற்றுச்சூழல் செய்திகள்


### மேகாலயாவில் மழைப்பொழிவு பற்றாக்குறை

- 2025 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவக்காற்று (SWM) பருவத்தில், மேகாலயாவில் 56% மழைப்பொழிவு பற்றாக்குறை பதிவானது.

- வழக்கமான 1,555.4 மிமீ மழைக்குப் பதிலாக 690.7 மிமீ மழை மட்டுமே பெய்தது.
- மேகாலயாவில் தற்போது, வழக்கத்தை விட 53% அதிக மழைப் பொழிவு பதிவான ஜார்க்கண்டை விட குறைவான மழைப் பொழிவு பதிவாகும்.
- மேகாலயாவில் வறண்ட பகுதிகளானது குறிப்பாக மேற்கு, மத்திய மற்றும் வடக்குப் பகுதிக்கு விரிவடைந்து வருவதாக ஆராய்ச்சி காட்டுகிறது.




## சுந்தரவன புலிகள் வளங்காப்பகத்தின் விரிவாக்கம்




- சுந்தரவன புலிகள் வளங்காப்பகத்தை (STR) சுமார் 1,100 சதுர கிலோமீட்டர்கள் அளவில் விரிவுபடுத்துவதற்கான திட்டம் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்திடம் (MoEF&CC ) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- இந்த விரிவாக்கம் ஆனது காப்பகத்தின் மொத்தப் பரப்பளவை 3,629.57 சதுர கிலோ

மீட்டராக அதிகரித்து, அதனை இந்தியாவின் இரண்டாவது பெரிய புலிகள் வளங் காப்பகமாக மாற்றும்.

- தேசிய புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) ஆனது ஏற்கனவே இந்த விரிவாக்கத்திற்கான தொழில்நுட்ப ஒப்புதலை வழங்கியுள்ளது.
- புதிய பகுதியில் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தில் உள்ள ராய்டிகி, மாட்லா மற்றும் ராம்கங்கா வனப்பகுதிகள் அடங்கும்.
- 80 புலிகள் STR காப்பகத்திற்குள்ளும் மற்றும் 21 அருகிலுள்ள காடுகளிலும் உள்ளதுடன் தற்போதைய புலிகளின் எண்ணிக்கை 101 என மதிப்பிடப்பட்டுள்ளது.

## கேரளாவில் பொன்னிற குள்ளநரிகள்




- கேரளாவின் பொன்னிறக் குள்ளநரிகளின் (கேனிஸ் ஆரியஸ் நரியா) எண்ணிக்கை 20,000 முதல் 30,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2,200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன் சுமார் 900 கிராமங்களில் மேற்கொள்ளப் பட்ட இந்த ஆய்வில் மாநிலம் முழுவதும் 5,000 நரிகள் பதிவு செய்யப்பட்டது.
- பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் 2 சதவீதம் மட்டுமே பதிவாகின, என்பதோடு அதில் பெரும்பாலானவை 200 மீட்டருக்கும் குறைவான உயரத்தில் உள்ள தாழ்வான பகுதிகளில் இருந்தன.
- தென்னை தோப்புகள் (24 சதவீதம்), கிராமப்புறக் குடியிருப்புகள் (10 சதவீதம்), நெல் வயல்கள் (8 சதவீதம்), இரப்பர் தோட்டங்கள் (6 சதவீதம்) மற்றும் நகர்ப்புறங்கள் (5.6 சதவீதம்) ஆகியவை அவற்றின் விருப்பமான வாழ்விடங்களில் அடங்கும்.
- கண்ணூர், கோழிக்கோடு, திருச்சூர், எர்ணாகுளம் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய சில இடங்களில் அவை அடிக்கடி தென்படுகின்றன, ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலைகள், ஆலப்புழா கடற்கரை மற்றும் அட்டப்பாடியில் பொருத்தமற்ற வாழ்விடங்கள் காரணமாக அவை குறைவாகவே காணப்படுகின்றன.
- மூணாறு மற்றும் எராவிக்குளம்/இரவிகுளம் தேசியப் பூங்காவில் தனிமைப் படுத்தப் பட்ட குழு காணப்படுகிறது என்பதோடு இது அதிக உயரமுள்ளப் பகுதிகளுக்கான

அவற்றின் ஓரளவிலான தகவமைப்பினைக் காட்டுகிறது.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் AI அடிப்படையிலான சாலை பாதுகாப்பு திட்டம்


- சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக என்று உத்தரப் பிரதேசத்தின் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பெரியத் தரவு பகுப்பாய்வு முன்னோடி திட்டத்தினை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- இந்தத் திட்டமானது, ITI லிமிடெட் மற்றும் mLogica ஆகியவற்றினால் செலவில்லாமல் செயல்படுத்தப்படுகிறது.
- வாகன தகவல் தொடர்பு மற்றும் வானிலை தகவல்கள் உள்ளிட்ட பல மூல தரவுகளைப் பயன்படுத்தி விபத்துகளைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அமலாக்கம், இயங்கலை வழி உரிமம் வழங்கல், அனுமதிகள், வருவாய் அமைப்புகள், இணைய ரசீது/சலான் செயல்பாடுகள் மற்றும் 'வாகன் சாரதி' வாகனப் பதிவேட்டை மேம்படுத்தும்.
- இந்தத் திட்டமானது நல்ல சட்ட இணக்கம் மற்றும் தரவுத் தனியுரிமைகள் குறித்த தொடர்ச்சியான தணிக்கைகளுடன் மோட்டார் வாகனச் சட்டம், 1988 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 ஆகியவற்றுடன் முழுமையாக இணங்குகிறது.




## கர்லாஜர் கிராமத்தின் சமூக தீ மேலாண்மை

- உதாண்டி-சிதாநதி புலிகள் வளங்காப்பகத்திற்குள் அமைந்துள்ள சத்தீஸ்கரின் காரியாபந்த் மாவட்டத்தில் உள்ள கர்லாஜார் கிராமம், 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பல காட்டுத் தீயை திறம்பட கட்டுப்படுத்தியது.
- இந்த ஆண்டு கர்லாஜரில் நான்கு முதல் ஐந்து தீ விபத்துகள் ஏற்பட்டன, இவை அனைத்தும் அந்தக் கிராமவாசிகளால் மிகவும் குறைந்தபட்ச சேதத்துடன் விரைவாக கட்டுப்படுத்தப் பட்டன.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் 2025 ஆம் ஆண்டில் 19,003 தீ விபத்துகள் பதிவானது.
- காரியாபந்த் மாவட்டத்தில் 789 மற்றும் உதாண்டி-சிதாநதி புலிகள் வளங்காப்பகத்தில் 866 தீ விபத்துகளுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் இது மிக உயர்ந்த எண்ணிக்கை ஆகும்.
- பத்து ஆண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு 2023 ஆம் ஆண்டில் கர்லாஜார் கிராமம் வன உரிமைகள் சட்டத்தின் (FRA) 5 வது பிரிவின் கீழ் சமூக வன வள உரிமைகளை (CFRR) பெற்றது.

- FRA சட்டத்தின் 5வது பிரிவு, வன வளங்களை நிர்வகிக்கவும், மிகவும் அழிவுகரமான நடைமுறைகளைத் தடுக்கவும், அங்குள்ள காடுகளில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்விடங்களைப் பாதுகாக்கவும் கிராம சபைகளுக்கு (கிராம சபைகள்) அதிகாரம் அளிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சமூக வன வள மேலாண்மைக் குழு (CFRMC), தலா 5 பேர் கொண்ட 10 குழுக்களைக் கொண்ட தெங்கப்பள்ளி ரோந்து அமைப்பு மூலம் பாதுகாப்பை அமல்படுத்துகிறது.
- ஒவ்வொரு தெங்கப்பள்ளி குழுவும் மாதந்தோறும் மூன்று நாட்கள் ரோந்து சென்று சட்ட விரோத நடவடிக்கைகளைக் கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கைகள் அளிக்கச் செய்கின்றன.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### மேக்நாத் தேசாய்




- பிரபலப் பொருளாதார நிபுணரான குஜராத்தின் மேக்நாத் தேசாய் சமீபத்தில் காலம் ஆனார்.
- மார்க்சியப் பொருளாதாரக் கோட்பாடு (1973), பயன்பாட்டுப் பொருளாதார அளவியல் (1976), Marx's Revenge (2002) மற்றும் Who Wrote the Bhagavadgita? (2014) உள்ளிட்ட தாக்கம்

மிக்கப் படைப்புகளை அவர் எழுதியுள்ளார்.

- ஐக்கியப் பேரரசின் அரசியல் மற்றும் சமூக நிலப்பரப்பில் மிகவும் புதிய தளத்தை உருவாக்கிய தொழிலாளர் கட்சியில் பங்கு பெற்ற முதல் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர் இவரே ஆவார்.
- கல்வித்துறைக்கு அவர் ஆற்றிய வாழ்நாள் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக 2008 ஆம் ஆண்டு இந்திய அரசினால் அவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## 400 மைல் தொலைவிலான புதைபடிவ எரிமலை தொடர்

- 800 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட 400 மைல் (700 கிமீ) நீளமுள்ள புதைபடிவ எரிமலை வளைவு தென் சீனாவின் யாங்சே தொகுதியின் கீழ் கண்டறியப் பட்டுள்ளது.
- ரோடினியாவின் உடைவின் போது உருவான இது, தட்டையான தட்டின் கீழமிழ்தல் மூலம் ஏற்பட்டது, இதனால் பாறைக் குழம்பு மேலெழும்பியதுடன், ஆழமான பகுதி திடப்படுத்தப்பட்டது.
- 6 கிமீ ஆழம் வரையிலான வான்வழி காந்த உணர்திறன் மற்றும் ஆழ்துளைகள் இந்த வளைவு தொடர்பான புவி வேதியியலுடன் கூடிய எரிமலைப் பாறைகளை வெளிப் படுத்தின.
- யுரேனியம்-ஈயம் காலக் கணிப்புகள் ஆனது இதன் உருவாக்கத்தினை, ஆரம்பகால நியோப்ரோடெரோசோயிக் சகாப்தத்தில் 770 முதல் 820 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையதாக உறுதிப்படுத்தப்பட்டது.
- வழக்கத்திற்கு மாறான அகலமான வளைவு (50 கிமீ வரை) ஆரம்பகாலக் கண்ட மேலோட்டின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய புரிதலை மறுவடிவமைக்கிறது.





## ரதடியா ரி தேரி


- ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள ரதடியா ரி தேரியில் ஒரு புதிய ஹரப்பா குடியேற்றம் கண்டறியப்பட்டுள்ளது என்பதோடு இது இராஜஸ்தானின் பாலைவனப் பகுதியில் உள்ள முதல் சிந்து சமவெளி தளத்தைக் குறிக்கிறது.
- இது இராம்கரிலிருந்து 60 கிமீ தொலைவிலும் பாகிஸ்தானின் சதேவாலாவிலிருந்து 17 கிமீ தொலைவிலும் அமைந்துள்ளது.
- இந்த இடம் என்பது வடக்கு இராஜஸ்தானை குஜராத்தின் பண்டைய நாகரிகங்களுடன்

இணைக்கிறது.

- இந்தக் கண்டுபிடிப்பில் மொஹெஞ்சதாரோ மற்றும் கன்மரில் காணப்பட்டதைப் போன்ற சிவப்பு மட்பாண்டங்கள், சுடுமண் பாண்டப் பொருட்கள், கற்கருவிகள் மற்றும் சூளை செங்கற்கள் ஆகியவை அடங்கும்.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த இடத்தைச் சிந்து சமவெளி நாகரிகத்தின் (கிமு 2600–1900) வளர்ச்சியடைந்த நகர்ப்புற கட்டமைப்பினைச் சேர்ந்ததாக கருதுகின்றனர் என்பதோடு இது ஒரு கிராமப்புற ஹரப்பா குடியேற்றப் பகுதியாக அடையாளம் காண்கின்றனர்.
- பாகிஸ்தானில் உள்ள ரோஹ்ரியில் இருந்து பெறப்பட்ட கருங்கல் கத்தி சான்றுகள் ஹரப்பா வலையமைப்பிற்குள் இருந்த நீண்ட தூர வர்த்தகம் மற்றும் கலாச்சாரத் தொடர்புகளைக் குறிக்கின்றன.



## இந்தியா முழுவதும் உள்ள வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகள்




- ஒரு புதிய ஆய்வு, முக்கியமாக இமயமலை, மேற்குக் கடற்கரை மற்றும் மத்திய இந்தியாவில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய பகுதிகளை அடையாளம் கண்டு உள்ளது.
- மிகவும் பாதிக்கப்படக் கூடிய துணைப் படுகைகள் பிரம்மபுத்திரா, நர்மதா, தபதி,

மகாநதி, பிராமணி மற்றும் மேற்கு கடற்கரை நதிப் படுகைகளில் அமைந்துள்ளன.

- கோதாவரி, கங்கை, மஹி மற்றும் சிந்து நதிப் படுகைகளின் சில பகுதிகளிலும் அதிக வெள்ள ஆபத்துள்ளப் பகுதிகள் காணப்படுகின்றன.
- பொதுவாக கடுமையான மழை பெய்யும் நான்கு முதல் ஆறு மணி நேரத்திற்குள் திடீர் வெள்ளம் ஏற்படும், மேலும் அவை பெரும்பாலும் மலைப்பாங்கான பகுதிகளில் மேக வெடிப்புகளால் ஏற்படுகின்றன.
- முக்கியக் காரணங்களில் நீர் நிரப்பு நிறைவுற்ற மண், அணைகளில் இருந்து திடீரென நீர் வெளியேற்றம் மற்றும் நகர்ப்புற மேம்பாடு காரணமாக விரைவான மேற்பரப்பு நீரோட்டம் ஆகியவை அடங்கும்.
- 2020 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் திடீர் வெள்ள வழிகாட்டுதல் அமைப்பு, இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு முன்பே முன் கூட்டியே எச்சரிக்கைகளை வழங்கச் செய்கிறது.

## முதலாம் இராஜேந்திர சோழனின் கடற்படைத் திறன்



- கடற்படை மேலாதிக்கமானது சோழப் பேரரசை அதன் மகிமையின் உச்சத்திற்குக் கொண்டு சென்றது.
- முதலாம் இராஜேந்திர சோழனின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ், சோழக் கடற்படை அதன் அதிகாரத்தின் உச்சத்தை அடைந்தது.
- கி.பி 1012 ஆம் ஆண்டில் அவர் அரியணை ஏறினார்
- இந்தியாவின் தெற்கு தீபகற்பம் முழுவதும் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததால், சோழர்கள் கடல்களுக்கான ஒரு தடையற்ற அணுகலைக் கொண்டிருந்தனர்.
- அதன் மூலம் அவர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையிலான அரசியல் விரிவாக்கத்தின் ஓர் அரங்கமாக மாறினர்.
- இராஜேந்திரனின் ஆட்சி சோழர்களின் வெளிநாட்டு ஆட்சி கையகப்படுத்துதல் என்ற இலட்சியத்தின் மிகவும் உறுதியான கட்டத்தைக் குறித்தது.
- இந்த காலக் கட்டத்தில் தொடங்கப் பட்ட கடற்படைப் படையெடுப்புகள் இலங்கையை இணைப்பதற்கும், வங்காள விரிகுடா முதல் மலாய் தீபகற்பத்தின் தொலைதூரப் பகுதிகள் வரை ஒரு துணிச்சலானப் படையெடுப்பிற்கும் வழி வகுத்தன.
- மலாய் தீபகற்பத்தின் மீதான வெற்றி இராஜேந்திரனுக்கு கடாரம் கொண்டான் (கடாரத்தை வென்றவர்) என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்தது.
- சோழர்களின் கடற்படையில் பல்வேறு தரங்களின் கீழ் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட

கப்பல்கள் மற்றும் படகுகளின் இருப்பு அவர் ஆட்சியின் வணிக மற்றும் இராணுவச் நோக்கங்களுக்காக சேவை செய்தது.

- K. A. நீலகண்ட சாஸ்திரி தனது The Cōlas என்றப் புத்தகத்தில் இராஜேந்திரனின் கடற் படைப் படையெடுப்புகள் பற்றிய விரிவான தகவல்களை வழங்கினார்.
- இது குறிப்பாக ஈழ மண்டலம் (இலங்கை) மற்றும் ஸ்ரீவிஜய இராட்சியத்தின் மூலோபாயக் கோட்டையான கடாரத்தைக் குறி வைத்து மேற்கொள்ளப் பட்டது.
- கி.பி 1017 ஆம் ஆண்டில், இராஜேந்திரன் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்க்கமான படையெடுப்பைத் தொடங்கினார்.
- அது அவரது ஆட்சியின் ஐந்தாவது ஆண்டு காலமாகும்.
- மேலும் இது அவரது தந்தை முதலாம் இராஜராஜ சோழனால் தொடங்கப்பட்ட முயற்சிகளின் உச்சக் கட்டத்தைக் குறித்தது.
- சோழர்களின் வெற்றி சிங்கள ஆட்சியாளர் ஐந்தாம் மஹிந்தாவின் முப்பத்தி ஆறு ஆண்டு கால ஆட்சியின் முடிவோடு ஒத்துப் போனது.
- இலங்கையில் உள்ள கல்வெட்டுகள் மற்றும் மகாவம்சத்தின் படி இந்தத் தகவல் உறுதி ஆனது.
- இது கி.பி 1017 ஆம் ஆண்டு தேதியிடப் பட்டது.
- இலங்கையில் சோழர்களின் ஈடுபாடு கி.பி 907 முதல் 955 வரை ஆட்சி செய்த முதலாம் பராந்தக சோழனின் ஆட்சியில் இருந்து ஆரம்பித்ததாகும்.
- இருப்பினும், அத்தீவின் வடக்குப் பகுதிகளை இணைத்தவர் இராஜராஜர் தான்.
- அங்கு சில பிரதேசங்கள் உள்ளூர் சிங்கள ஆட்சியரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த போதிலும், சோழர்களின் பிடி அங்கு படிப்படியாக இறுக்கமடைந்தது.
- இராஜேந்திரனின் தாக்குதல் அவரது தந்தையின் தாக்குதலை விட மிகத் தீவிரமாக இருந்தது.
- அவரது படைகள் ஐந்தாம் மஹிந்தாவைக் கைப்பற்றி, அவரது கிரீடம் உட்பட அரச உடைமைகளைக் கைப்பற்றின.
- அந்தத் தீவின் மீதான அவரது கட்டுப்பாடு, அதை ஒரு முழுமையான சோழ மாகாணமாக மாற்றும் அளவுக்கு விரிவானதாக இருந்தது.
- இராஜேந்திரனைக் குறிக்கும் திருமன்னி வளரன் என்ற பட்டப் பெயரைக் கொண்ட கல்வெட்டுகள் இலங்கையின் பொலன்னருவா அருகே காணப்பட்டன.
- சிவன் மற்றும் விஷ்ணு போன்ற தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தமிழ் சோழக் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்ட கோயில்கள், சோழர்களின் செல்வாக்கை அங்கு மேலும் குறிப்பிட்டுக் காட்டின.
- இப்படையெடுப்பிற்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு, கி.பி 1029 ஆம் ஆண்டில், ஒரு புதிய கிளர்ச்சி அங்கு வெடித்தது.
- இரகசியமாக வளர்க்கப்பட்ட ஐந்தாம் மஹிந்தாவின் மகன் கசபா, அங்கு ஒரு வெற்றி கரமான கிளர்ச்சியை முன்னேடுத்து மேற்கொண்டார்.
- ஆறு மாத மோதலுக்குப் பிறகு, அவர் மீண்டும் அரசக் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி, முதலாம் விக்கம்பாகுவாக ஆட்சி செய்து, சிங்கள இறையாண்மையை மீண்டும் நிறுவினார்.
- ஆனால் இராஜேந்திரனின் ஏகாதிபத்தியம் இலங்கையுடன் நிற்க வில்லை.
- கி.பி 1025 ஆம் ஆண்டில், கங்கைக்கு அவர் மேற்கொண்ட படையெடுப்பிற்குப் பிறகு, அவர் தனது பார்வையை கிழக்கு நோக்கி ஒரு செழிப்பான கடல்சார் இராட்சியமான

ஸ்ரீவிஜயத்தை நோக்கித் திருப்பினார்.

- இந்த தென்கிழக்கு ஆசியப் பேரரசு இந்தியாவை சீனாவுடன் இணைக்கும் முக்கியக் கடல் பாதைகளைக் கட்டுப்படுத்தியதோடு மலாய் தீபகற்பம், சுமத்ரா மற்றும் ஜாவா உள்ளிட்ட பிரதேசங்களை ஆட்சி செய்தது.
- ஆரம்பத்தில், சோழர்களுக்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் இடையிலான உறவுகள் சுமூகமாக இருந்தன.
- சூடாமணி விகாரைக் கட்டுவதற்காக வேண்டி இராஜராஜ சோழன் நாகப்பட்டினத்தில் சைலேந்திர வம்சத்தைச் சேர்ந்த மார விஜயோத்துங்கவர்மனுக்கு நிலம் வழங்கினார்.
- இந்த இரண்டு இராஜ்ஜியங்களுக்கும் சீனாவிற்கும் இடையே இராஜதந்திரப் பணிகள் தொடர்ந்து நடந்தன.
- ஸ்ரீவிஜயர் கி.பி 1003 மற்றும் 1008 ஆகிய ஆண்டுகளில் தூதர்களை அனுப்பினார், அதே நேரத்தில் சோழர்கள் கி.பி 1015, 1033 மற்றும் 1077 ஆகிய ஆண்டுகளில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.
- திருவாலங்காடு செப்புத் தகடுகளில் உள்ள கல்வெட்டுகள் கடாரத்தைக் கைப்பற்றியதை மட்டுமே குறிப்பிடுகின்றன.
- ஒரு தமிழ் பிரசாஸ்தி (ஒரு ஆட்சியாளரைப் புகழ்ந்து எழுதப்பட்ட ஒரு கல்வெட்டு) இன்னும் சில விவரங்களை வழங்குகிறது.
- ஒரு கூற்று, சோழர்களின் கடல்சார் வர்த்தகத்தில் ஸ்ரீவிஜயரின் தலையீட்டால் இந்த மோதல் ஏற்பட்டது என்று கூறுகிறது.
- மற்றொரு கூற்று, கடல்சார் மேலாதிக்கத்தை அடைவதற்கும் வெளிநாட்டுக் கௌரவத்தைப் பாதுகாப்பதற்குமான இராஜேந்திரரின் பரந்த இலட்சியத்தின் ஒரு பகுதியாக இதைப் பார்க்கிறது.
- இராஜேந்திரரின் தென்கிழக்கு ஆசியப் படையெடுப்பு விரைவாகவும் தீர்க்கமாகவும் இருந்தது.
- சோழக் கப்பல்கள் வங்காள விரிகுடாவைக் கடந்து ஸ்ரீவிஜய சக்தியின் மையத்தில் தாக்கின.
- கடாரம் கைப்பற்றப்பட்டதோடு, மாற விஜயோத்துங்க வர்மனின் வாரிசான சங்கிராம விஜயோத்துங்கவர்மன் சிறை பிடிக்கப் பட்டார்.
- சோழர்கள் கடல் கடந்து வலிமை பெறுவார்கள் என்று படையெடுப்பு மேற் கொள்ளப் பட்டாலும், கைப்பற்றப்பட்டப் பிரதேசங்களில் நேரடி ஆட்சியை நிறுவ உடனடி முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.
- இராஜேந்திரனின் வாரிசான முதலாம் வீர ராஜேந்திரன், கடாரத்தை மீண்டும் கைப்பற்றி அதன் ஆட்சியாளரை மீண்டும் அமர்த்தக் கூறினார் என்ற நிலையில் இது முந்தைய வெற்றிகள் தற்காலிகமானவை என்பதைக் குறிக்கிறது.
- சுமத்ராவிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கி.பி 1088 தேதியிட்ட ஒரு தமிழ் கல்வெட்டு, இப்பகுதியில் சோழர்களின் தொடர்ச்சியான நடவடிக்கைக்கு மேலும் சான்றுகளை வழங்குகிறது.
- இது குறைந்தபட்சம் வணிக ரீதியாக இருந்தது.
- இராணுவ வெற்றிகளுக்கு அப்பால், இந்தப் பயணங்கள் சோழப் பேரரசின் பரந்த இராஜதந்திர வரம்பை எடுத்துக்காட்டுகின்றன.
- கரந்தை செப்புத் தகடுகளில் உள்ள கல்வெட்டுகள், காம்போஜ மன்னர் (முதலாம் சூரியவர்மன் ஆட்சி செய்த அங்கோர் இராட்சியம்) இராஜேந்திரனுக்கு ஒரு வெற்றி கரமான போர் ரதத்தை அனுப்பி, அதன் மூலம் அவர் தனது எதிரி நாட்டுப் படைகளைத்

தோற்கடித்ததை சுட்டிக் காட்டியது.

- இராஜேந்திரனின் கடற்படைப் பயணங்கள் வரலாற்றில் ஒரு துணிச்சலான அத்தியாயத்தைக் குறித்தன.
- அவை சோழப் பேரரசின் அரசியல் மற்றும் கலாச்சார வரம்பை இந்தியத் துணைக் கண்டத்திற்கு அப்பால் நீட்டித்தன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★